**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**நாள். 10.06.2025**

**O.S. 28/2022**

**வா.சா. 1 - செல்வின்**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஐந்து ஆவணங்களில் இருந்து மணவிளை சி.எஸ்.ஐ சர்ச் மூலமாக YMM மிஷினரி காணிக்கை செலுத்திய விபரம் துலங்காது என்றால் சரிதான். YMM மிஷினரி போன்ற வேறு அமைப்புகளுக்கு சி.எஸ்.ஐ சர்ச் மணவிளை மூலம் எந்த விதமான பணபரிவர்த்தனையும் செய்ய முடியாது என்றால் சரியல்ல. விருப்பப்பட்ட நபர்கள் YMM மிஷினரிக்கு தான் நேரடியாக காணிக்கை செலுத்த முடியும் என்றால் சரியல்ல. YMM மிஷினரி என்பது ஒரு ஸ்தாபனமா, சர்ச்சா என்றால் ஸ்தாபனம். இதுபோன்ற ஸ்தாபனங்களுக்கு காணிக்கை செலுத்த முடியாது நன்கொடை தான் செலுத்த முடியும் சர்ச்சுகளுக்கு தான் காணிக்கை செலுத்த முடியும் என்றால் சரியல்ல ஏழைகளுக்கு சர்ச் மூலமாக கொடுப்பது காணிக்கை என்று தான் கூறுவோம். YMM மிஷினரி சர்ச் இல்லை என்பதால் காணிக்கை வகையில் வராது என்றால் சரிதான்.

இந்த வழக்கில் நான் YMM மிஷினரியை கட்சி சேர்க்க வில்லை என்றால் சரிதான். சி.எஸ்.ஐ. மணவிளை சர்ச் என்னை பொறுத்தவரையில் தபால் அலுவலமாக செயல்படமுடியாது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 5 வருடமாக மணவிளை சர்ச்சிக்கு காணிக்கை கொடுத்ததை நிரூபிப்பதற்கு நான் எந்த ஆவணமும் இதுவரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். YMM மிஷினரிக்கு வங்கி மூலமோ தபால் அலுவலகம் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ தான் எந்த தொகையும் செலுத்த முடியும் என்றால் சரியல்ல. என்னுடைய தாய்மாமா ராஜதுரை மணவிளை சி.எஸ்.ஐ சர்ச்சில் செயலாளராக

செயல்பட்டார் என்றால் சரிதான். நான் சொல்லக்கூடிய ஐந்து வருடங்களிலும் எனது தாய்மாமா ராஜதுரை தான் எனக்காக YMM மிஷினரிக்கு தொகை செலுத்தி வந்தார் ஆனால் நான் சர்ச்தான் செலுத்தி வந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சி.எஸ்.ஐ சர்சுகளுக்கெல்லாம் பிஷப்தான் தலைவர் என்றால் சரிதான். அந்த முறையில் பிஷப்பிற்கு உத்தரவு வழங்க அதிகாரம் இருக்கிறது என்றால் சரியல்ல. நான் பிஷப்பிடம் மனு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். பரிகாரம் கேட்டுதான் அவரிடம் மனு கொடுத்தேன் என்றால் சரிதான். அவர் என்ன உத்தரவு பிறப்பித்தார் என்றால் நான் நேரடியாக YMM மிஷினரிக்கு தொகை கொடுக்க வேண்டும் என்று உத்தரவு போட்டார்.

மேற்படி உத்தரவு 25.03.2021 அன்று போடப்பட்டது என்றால் சரிதான். நான் பிஷப் பிறப்பித்த மேற்படி உத்தரவை ரத்து செய்ய கோரி இந்த வழக்கில் பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் 25.03.2021 அன்று பிஷப் உத்தரவு பிறப்பித்ததையும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி உத்தரவையும் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். YMM மிஷினரியின் நன்கொடை தொகையை நேரடியாக பெறாததால் என்னுடைய சிவில் உரிமைகள் எதுவும் பாதிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. பிஷப்பின் உத்தரவை மீறி சர்ச் செயலாளர்கள் செயல்பட முடியாது அவருடைய உத்தரவை நிறைவேற்றுவது பிரதிவாதிகளின் கடமை என்றால் சரியல்ல. வேறு அமைப்புகளுடைய பணத்தை ஒரு சர்ச் பெற்றால் அது சட்டப்படி குற்றம் என்றால் சரியல்ல. என்னுடைய மாமா ராஜதுரை தற்போது நடந்த தேர்தலில் தோல்வியுற்றார் என்றால் சரிதான். அவரை எதிர்த்துதான் 1ம் பிரதிவாதி ஜெயித்தார் என்றால் சரிதான். என் மாமா ராஜதுரை இதுவரையில் சர்ச்சின் மினிட் புக் மற்றும் கணக்குகள், ஆவணங்கள் எதையும் 1 மற்றும் 2 ம் பிரதிவாதியிடமோ ஒப்படைக்கவில்லை என்றால் எனக்கு தெரியாது.

அதைபோன்று சர்ச்சினுடைய வங்கி கணக்குகளும் எனது மாமா ராஜதுரை தோல்வியடைந்த பின்பும் இன்று வரையில் 1ம் பிரதிவாதியின் பெயரில் மாற்றி கொடுப்பதற்கு கடிதம் வழங்கவில்லை ஆகையால் இதுவரையிலும் வங்கி கணக்கு ராஜதுரையின் பெயரில் தான் இருக்கிறது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. நான் எனது மாமா ராஜதுரையில் தூண்டுதலின் பெயரில் இந்த வழக்கில் பிஷப் 25.03.2021 அன்று உத்தரவு பிறப்பித்த பின்பும் அதை வேண்டுமென்றே மறைத்து நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிஷப்பின் உத்தரவை ரத்து செய்ய எந்த பரிகாரமும் கோரவில்லை என்பதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சி.எஸ்.ஐ டயசிஸ் மற்றும் பிஷப்பை கட்சி சேர்க்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் கோரியபடி எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல ஆகையால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**